intersex Asia

# ஆசிய இன்டர்செக்ஸ் அறிக்கை 2023



“நாங்கள் ஆசியாவில்
இன்டர்செக்ஸ்
மனித உரிமைகளை
பாதுகாக்கின்றோம்”




இன்டர்செக்ஸ் மக்கள் தூய தமிழில் இடைபாலினர், ஊடுபாலினர் மற்றும் இடையிலிங்க மக்கள் என அழைக்கபடுகிறார்கள். இடைபாலினர் மனித உரிமைகள் நிதியத்தால் ஆதரிக்கப்படும் மூன்றாவது ஆசிய இன்டர்செக்ஸ் (இடைபாலினர்) கூட்டமைப்பு, தாய்லாந்தின் பாங்காக் நகரில் கடந்த 2022-ஆம் வருடம் அக்டோபர் மாதம் 25 மற்றும் 26-ஆம் தேதிகளில் நடைபெற்றது. இந்தியா, இந்தோனேசியா, நேபாளம், பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், தைவான், தாய்லாந்து, மங்கோலியா மற்றும் ஜப்பான் நாடுகளைச் சேர்ந்த இன்டர்செக்ஸ் அமைப்புகள் மற்றும் சமூகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நோக்கில் 22 இன்டர்செக்ஸ் நபர்களை இம்மன்றம் ஒன்றிணைத்தது.

“இன்டர்செக்ஸ்” எனப்படுவது பல்வேறு விதமான வேறுபாடுகளை கொண்ட இயற்கையான உடல் மாறுபாடுகளை விவரிக்க பயன்படுத்தப்படும் ஒற்றை ஒருங்கிணைவு சொல்லாகும். சில சந்தர்ப்பங்களில், பிறக்கும்போதே இன்டர்செக்ஸ் குணாதிசயங்கள் வெளிப்படையாக தெரியும், சிலசமயங்களில் அவை பருவமடையும் வரை வெளிப்படையாக தெரிவதில்லை. சில குரோமோசோமல் (மரபணு இணைவு தளம்) மரபணு இணைவு அல்லது பிறழ்வு நிலை மாறுபாடுகள் உடல் ரீதியாக வெளிப்படையாக இருக்காது. ஆண் அல்லது பெண் உடல்களின் ஒரே மாதிரியான வரையறைகளைக் காட்டிலும் மிகவும் மாறுபட்ட பாலினப் பண்புகளின் மாறுபாடுகளுடன் (பிறப்புறுப்புகள், இனப்பெருக்க உறுப்புகள் மற்றும் அதன் அமைவிடம், பால் ஹார்மோன்கள் எனப்படும் நிணநீர் சுரப்பிகள், அதன் அமைப்புகள் மற்றும் வடிவங்கள் ஒரே மாதிரி இருப்பதில்லை. மேலும் குரோமோசோமல் மரபணு இணைவு அல்லது மரபணு பிறழ்வு, அதன் வடிவங்கள் ஒத்த அல்லது மாறுபட்ட பண்புகளை கொண்ட இயல்பான நிலையிலேயே இன்டர்செக்ஸ் நபர்கள் பிறக்கிறார்கள். உலகளாவிய மக்கள் தொகையில் சுமார் 1.7% வரை இத்தகைய இயற்கையான பண்புகளுடன் இடைபாலின மக்கள் பிறக்கிறார்கள்; இருப்பினும், அவர்களின் உடல் அமைப்புகள் வேறுபட்டதாகக் காணப்படுவதால், இன்டர்செக்ஸ் குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் பெரும்பாலும் களங்கம் மற்றும் தீங்கு விளைவிக்கும் நடைமுறைகளுக்கு உட்படுத்த படுகின்றனர்- மருத்துவ அமைப்புகள் உட்பட, சமுக பொருளாதார ரீதியிலும், பொது சமுகத்தில் பல வகைகளிலும் பாகுபாட்டிற்கு ஆளாகிறார்கள்.

# முன்னுரை

இன்டர்செக்ஸ் நபர்கள் முற்றிலும் இயற்கையான மனிதர்கள் மேலும் உண்மையான நபர்கள் என்பதை நாங்கள் உறுதிசெய்கிறோம், மேலும் ஆசியாவின் அனைத்து நாடுகளும் உட்பட உலகெங்கிலும் உள்ள அனைத்து பிராந்தியங்களிலும் அனைத்து நாடுகளிலும் நாங்கள் இருக்கிறோம். எனவே, சமூக, அரசியல், பொருளாதார மற்றும் சட்டமன்ற மாற்றங்களின் இயக்கிகளாக இருப்பதற்கு இன்டர்செக்ஸ் மக்கள் ஆதரிக்கப்பட வேண்டும்.

நாங்கள் ஆசியாவின் பல்வேறு பகுதிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் இன்டர்செக்ஸ் ஆர்வலர்கள், ஆசிய கண்டத்தில் பல நாடுகளில் இயங்கி வருகின்றோம். பாலின பாகுபாடு , வன்முறை, வேற்றுமை, ஒதுக்குதல், அவமதித்தல் போன்ற காரணங்களால் பாதிக்கப்படும் இன்டர்செக்ஸ் குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கு எதிரான தீங்கு விளைவிக்கும் நடைமுறைகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கும், இன்டர்செக்ஸ் மக்களின் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் ஒன்றாகச் செயல்படுகிறோம்.

# கோரிக்கைகள்

## 1 இன்டர்செக்ஸ் மக்களின் உடல்ரீதியான சுய உரிமைகளை பாதுகாத்தல்.

1. இன்டர்செக்ஸ் மக்களின் இயல்பான பிறவி குணாதிசயங்கள், உடல் மாறுபாடுகள் ஆகியவற்றை பாலின குணாதிசயங்களாக ஒப்புக்கொள்வது அவசியம், ஏனெனில் இது ஒரு நோயோ அல்லது ஊனமோ அல்ல முழுமையாக இயல்பான வேறுபாடு ஆகும்.

2. இன்டர்செக்ஸ் நபர்களின் உடல் ஒருமைப்பாடு மற்றும் நல்வாழ்வை உறுதி செய்தல்.

3. உளவியல் சார்ந்த - சமூக விழிப்புணர்வு, பாலினம் சார்ந்த விழிப்புணர்வு கொண்ட சகாக்களின் ஆதரவு, நோயாகவோ குறைபாடாகவோ கருதக்கூடாத விழிப்புணர்வு, மற்றும் பாலின-உறுதிப்படுத்தல் அவர்களது சுய உரிமை போன்ற ஆதரவுகள், இன்டர்செக்ஸ் நபர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்கள், அல்லது பராமரிப்பு வழங்குநர்களுக்கு ஆதரவு கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

4. மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள், பணி செய்யும் இடங்கள், அதிகாரிகள் மற்றும் அரசாங்க அமைப்புகள் போன்ற குடிமைப் பணி மற்றும் சமூக நிறுவனங்களுடன் ஈடுபடும் போது, இடைபாலின மக்களின் தனியுரிமை மற்றும் கண்ணியத்திற்கான உரிமையைப் பாதுகாப்பதை உறுதி செய்தல் வேண்டும்.

5. கருத்தொற்றுமையற்ற மற்றும் தேவையற்ற மருத்துவ தலையீடுகளுக்குத் தள்ளப்பட்டு, இப்போது உடல்நல பாதிப்புகள் மற்றும் தீர்வை எதிர்நோக்கும் இன்டர்செக்ஸ் மக்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குதல் வேண்டும்.

# கோரிக்கைகள்

## 2

## அனைத்து பகுதிகளிலும் பாகுபாடு காட்டப்படுவதிலிருந்து இடைபாலின மக்களைப் பாதுகாத்தல் வேண்டும்.

1. இன்டர்செக்ஸ் மக்களின் பாலினப் பண்புகளை பாகுபாட்டிற்கு மற்றும் ஒதுக்குதலுக்கு எதிரான சட்டத்தில் சேர்ப்பதன் மூலம் அம்மக்களை பாகுபாட்டிலிருந்து பாதுகாப்பது மற்றும் மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள், குடிவரவு அலுவல்கள் மற்றும் அரசு அமைப்புகள் போன்ற குடிமைப் பணி மற்றும் சமூக நிறுவனங்களுடன் ஈடுபடும் போது இழைக்கப்படும் பாகுபாடுகளுக்கு எதிராக பாதுகாப்பை உறுதிசெய்திடல் வேண்டும். மேலும், பாலினப் பண்புகளின் அடிப்படையில் பாகுபாட்டை அனுமதிக்கும் சட்டங்கள் இதன் மூலம் திருத்தப்பட வேண்டும்.

2. இன்டர்செக்ஸ் நிலையை குறிக்கும் அனைத்து விதிமுறைகளிலிருந்தும் களங்கத்தை நீக்குதல் வேண்டும்.

3. பிரதிபெயர்களின் பயன்பாட்டை உறுதிசெய்ய, தகவல்தொடர்புகளில், குறிப்பாக கல்வி நிறுவனங்கள் மற்றும் பணியிடங்களில் இடைபாலின நபர்களை திறம்பட அங்கீகரிப்பதற்காக முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்.

4. பணியிடத்தில் பாகுபாடு காட்டப்படுவதிலிருந்து இடைபாலின மக்களைப் பாதுகாப்பது, பாலியல் துன்புறுத்தலுக்கு எதிரான கொள்கைகள் இடை பாலினத்தவர்களைப் பாதுகாக்கும் வகையில் உருவாக்கப்பட வேண்டும்.

# கோரிக்கைகள்

## 2

## அனைத்து பகுதிகளிலும் பாகுபாடு காட்டப்படுவதிலிருந்து இடைபாலின மக்களைப் பாதுகாத்தல் வேண்டும்.

5. குடிவரவு மற்றும் தேசிய அல்லது சர்வதேச அளவில் பயணம் செய்யும் போது விமான நிலையங்களில் பாதுகாப்பு சோதனைகளின் போது இடைபாலின மக்கள் இழிவு படுத்துதல், விமர்சித்தல் மற்றும் துன்புறுத்தலில் இருந்து பாதுகாப்பை உறுதி செய்தல் வேண்டும்.

6. பாகுபாடு, வன்முறை, ஒதுக்குதல் மற்றும் தகுந்த இன்டர்செக்ஸ் நிலைப்பாட்டை உறுதிப்படுத்தும் உளவியல் ரீதியான ஆதரவு நல்காமை, ஆகியவற்றுக்கு எதிரான இன்டர்செக்ஸ் அகதிகளின் தேவையை அங்கீகரிப்பதும் அவசியம் ஆகும்.

7. திருமணம் மற்றும் தத்தெடுப்புச் சட்டங்களில் இடைபாலினத்தவர் களுக்கான சமமான மற்றும் பாரபட்சமற்ற சட்டப் பாதுகாப்பை உறுதி செய்தல் வேண்டும்.

# கோரிக்கைகள்

## 3 இன்டர்செக்ஸ் மக்களுக்கான உறுதியான, நிலையான, சுகாதாரப் பாதுகாப்புக்கான அணுகும் வசதிகள் செய்யப்பட வேண்டும்.

1. மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள் போன்ற பொது இடங்களில் இடைபாலின வேறுபாடுகளை சுட்டிக்காட்டி, மருத்துவமயமாக்கல் போன்ற மனிதாபிமானமற்ற தன்மை, மற்றும் இன்டர்செக்ஸ் நபர்களின் மீது களங்க படுத்துதல் ஆகியவை குறிப்பிடத்தக்க அம்மக்களுக்கு மன அதிர்ச்சி, சமுக பயம், மன விரக்தி மற்றும் மனநலக் கவலைகளை விளைவிக்கின்றன என்பதை அங்கீகரிப்பது அவசியம்.மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள் போன்ற பொது இடங்களில் இடைபாலின வேறுபாடுகளை சுட்டிக்காட்டி, மருத்துவமயமாக்கல் போன்ற மனிதாபிமானமற்ற செயல்கள், மற்றும் இடைபாலின நபர்களின் மீது களங்கப் படுத்துதல் ஆகியவை அம்மக்களுக்கு மன அதிர்ச்சி, சமுக பயம், மன விரக்தி மற்றும் மனநல கவலைகளை விளைவிக்கின்றன என்பதை அங்கீகரிப்பது அவசியம்.

2. இன்டர்செக்ஸ் நபர்களின் நல்வாழ்வை உறுதி செய்வதில் மிக முக்கிய பங்கை வகிக்கும் சுகாதார வழங்குநர்கள், மருத்துவர், தாதியர் போன்ற சேவை வழங்குநர்களுக்கு போதுமான இடைபாலினர் பற்றிய புரிதல் மற்றும் பாலின உறுதிப்படுத்தல் தொடர்பான பயிற்சிகளை அளிப்பதை உறுதி செய்தல் வேண்டும்.

3. அனைத்து வகையான மருத்துவ சோதனைகளின் போதும் இடைபாலினத்தவர் களுக்கான சுகாதாரத் தேவைகள், அவர்களின் ரகசியத்தன்மையைப் பாதுகாப்பது, உட்பட கண்ணியமான மற்றும் மரியாதைக்குரிய முறையில் கவனிக்கப்படுவதை உறுதி செய்வதை நோக்கமாக கொண்ட சுகாதார வழங்குநர்களுக்கு மனித உரிமைகள் அடிப்படையிலான வழிகாட்டுதல்களை வழங்குதல் அவசியம்.

4. இன்டர்செக்ஸ் நபர்களின் உடல் மற்றும் மனநல தேவைகள் மற்றும் சிக்கல்களைப் பூர்த்தி செய்யும் பொருட்டு எளிதில் அணுகக்கூடிய மற்றும் நேர்மையான, சரியான, உறுதியான மருத்துவ சுகாதார மற்றும் மனநல ஆலோசனை சேவைகளை வழங்குதல் வேண்டும்.

# கோரிக்கைகள்

## 3

## இன்டர்செக்ஸ் மக்களுக்கான உறுதியான, நிலையான, சுகாதாரப் பாதுகாப்புக்கான அணுகும் வசதிகள் செய்யப்பட வேண்டும்.

5. பாலினம் மற்றும் பாலின குணாதிசயங்களுக்கான, இன்டர்செக்ஸ் மக்கள் பற்றி நன்கு அறிந்த சிறப்புத் துறைகளின் பட்டியலை பொது சுகாதாரத் துறை மூலம் வழங்குதல், அல்லது மாநில, மண்டல மற்றும் மாவட்டங்கள் உட்பட அனைத்து நிலைகளிலும் உள்ள மருத்துவ நிறுவனங்களில் உள்ள சிறப்பு மருத்துவ நிபுணர்களின் பட்டியலை இன்டர்செக்ஸ் நபர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு மருத்துவ, மனநல பாதுகாப்பு மற்றும் சுகாதார அணுகலுக்காக வழங்க வேண்டும்.6. இன்டர்செக்ஸ் நபர்களுக்கு மானியத்துடன் கூடிய யுனிவர்சல் ஹெல்த்கேர் இன்சூரன்ஸ் (சர்வதேச உடல்நலக் காப்பீடு). மற்றும், இன்டர்செக்ஸ் நபர்களுக்கான உடல்நலக் காப்பீட்டுக் கொள்கைகளை சேர்க்க தனியார் காப்பீட்டு வழங்குநர்களுக்கு வழிகாட்டுதல்கள் உருவாக்கப்பட வேண்டும்.

6. இன்டர்செக்ஸ் நிலை பண்புகள் பற்றி அறியும் ஆய்வக சோதனைகளில் அரசு அல்லது தனியார் ஆய்வகங்களில் மரபணு, நிணநீர் சுரப்பிகள், மற்றும் அடிப்படை ஆய்வக மாதிரி மாறுபாடுகள் தொடர்பான மருத்துவ பரிசோதனைகளுக்கு எளிதில் அணுகக்கூடிய மற்றும், நியாயமான விலையை ஒழுங்குபடுத்துதல் அவசியம்.

7. இன்டர்செக்ஸ் மக்களுக்குத் தேவையான மாத்திரைகள், மருந்துகள், மலிவு விலையில் நிலையான மருந்துகள் கிடைப்பதை உறுதி செய்தல் வேண்டும்.

8. இன்டர்செக்ஸ் நபர்களுக்கு அரசாங்கம் மற்றும் தனியார் துறை சர்வதேச காப்பீடு இணையை (யுனிவர்சல் ஹெல்த் கவரேஜை) வழங்கிட வேண்டும். இது நோயறிதல், சிகிச்சைகள் மற்றும் சிகிச்சைக்கு பிந்தைய செலவீனங்கள் இரண்டையும் உள்ளடக்கிய தாக இருந்திட வேண்டும்.

# கோரிக்கைகள்

4

## உள்ளடக்கிய கல்வி

1. பிறப்புக்கு முந்தைய ஆலோசனை, மற்றும் ஆதரவில் மனித உரிமைகள் அடிப்படையிலான இன்டர்செக்ஸ் நிலை பற்றிய புரிதல்,கற்றல் நோக்கில் கல்வியாக சேர்க்கபடவேண்டும்.

2. இன்டர்செக்ஸ் மக்கள், மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு அதிகாரமளிக்க மனித உரிமைகள் அடிப்படையிலான கல்வியை வழங்குதல் வேண்டும்.

3. அனைத்து நிலைகளிலும் விரிவான பாலியல் கல்வியை வழங்குதல், இதில் இடைபாலினத்தவர் களைப் பற்றிய குறிப்புகள் மற்றும் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள் கண்ணியமான முறையில் அமையபெற்று இருக்கவேண்டும்.

4. அடிப்படை பாலியல் கல்வி பாடத்திட்டத்தை புதுப்பித்து, மாற்று பாலினத்தவர் மற்றும் SOGIESC உரிமைகள் (பால் ஈர்ப்பு, பாலின அடையாளம், பாலின வெளிப்பாடு மற்றும் பாலின ஒருங்கிணைவு பண்புகள்) தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய தாக அமைத்தல் வேண்டும்.

5. 'பாலின அடையாளம்' மற்றும் 'பாலியல் பண்புகள்' மற்றும் இரண்டிற்கும் இடையே உள்ள வேறுபாட்டை ஆசிரியர்கள் புரிந்துகொள்வதை உறுதிசெய்யும் வகையில் கல்வி நிறுவனங்களுக்கு பயனுள்ள பயிற்சி தொகுதிகளை செயல்படுத்துதல் வேண்டும்.

6. மருத்துவ நிறுவனங்களில் உள்ள பாடத்திட்டத்தை புதுப்பித்து, அது இடைபாலின மக்களின் உடல்நலம் தொடர்பான சவால்கள் மற்றும் SOGIESC (பால் ஈர்ப்பு, பாலின அடையாளம், பாலின வெளிப்பாடு மற்றும் பாலின ஒருங்கிணைவு பண்புகள்) போன்ற உரிமைகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

# கோரிக்கைகள்

5

## வி. பிறக்கும்போதே இன்டர்செக்ஸ் குழந்தைகளின் பதிவு

1. இன்டர்செக்ஸ் குழந்தைகளை பெண் அல்லது ஆணாக மட்டுமே பதிவு செய்ய வேண்டும் அல்லது முடியும் என்று கட்டுப்படுத்தாமல், எல்லா மக்களைப் போலவே, அவர்களும் வெவ்வேறு பாலினம் அல்லது பாலின அடையாளம் காணும் வகையில் வளரலாம் என்ற விழிப்புணர்வோடு, இன்டர்செக்ஸ் குழந்தைகளை பதிவு செய்வதற்கான தனி பதிவு செய்தல்முறை மற்றும் அதற்கான சீரான வழிகாட்டுதல்களை வழங்குதல் வேண்டும்.

# கோரிக்கைகள்

6

## அனைத்துப் பகுதிகளிலும் உள்ள பாலினப் பண்புகளின் சட்டப்பூர்வ அங்கீகாரம்

1. இன்டர்செக்ஸ் மக்களுக்கு அனைத்து மனித உரிமைகள், மற்றும் குடியுரிமை உரிமைகள், வழங்கப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்.

2. இடை பாலினத்தினரின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக சர்வதேச மன்றங்கள் வெளியிடும் அறிக்கைகளை அந்தந்த அரசாங்கம் ஆதரிக்க வேண்டும், மேலும் அதன் உண்மை நிலையை புரிந்து கொண்டு அவற்றுடன் இணைந்து பங்கேற்க வேண்டும், மற்றும் மக்கள் அனைவரும் சமம் என்ற நோக்கில், இடை பாலின மக்களின் நலவாழ்வு மற்றும் வாழ்வியல் ஆதரவாகவும் நிற்க வேண்டும்.

3. மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி, வரவுசெலவுத் திட்டத்தில் இடைபாலின சமூக மக்களை, அவர்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும், குறிப்பிட்ட நிதி நிலைகள் ஒதுக்கீடுகளைச் செய்தல் வேண்டும்.

4. இன்டர்செக்ஸ் என்பது உயிரியல் பாலின பண்புகளுடன் தொடர்புடையது. மற்றும் ஒரு நபரின் பாலியல் நோக்குநிலை என்பது, பாலின அடையாளத்திலிருந்து வேறுபட்டது என்பதை அங்கீகரிப்பது அவசியமாகிறது. ஒரு பாலின நபர் பல்வேறு பாலியல் நோக்குநிலைகள் மற்றும் பாலின அடையாளங்களைக் கொண்டிருக்கலாம், மற்றும் ஆண், பெண் அல்லது இருபால் நிலை அல்லாதவராகவும் அடையாளம் காணலாம் என்பதை தெளிவுற வேண்டும்.

5. சட்டப்பூர்வ பாலினம் அல்லது பாலின வகைப்பாடுகள் பற்றிய எடுகோள்கள் இலவசமாக சம்பந்தப்பட்ட நபர்களின் வேண்டுகோளின்படி ஒரு எளிய நிர்வாக நடைமுறையின் மூலம் திருத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும். இதன் மூலம் அனைத்து பெரியவர்கள் மற்றும் சிறார்களும் பெண் (F), ஆண் (M), இருபால் தெரிவுநிலை அல்லாதவர்கள் ஆகியோர் தனது விருப்பங்களை தேர்வு செய்ய முடியும். எதிர்காலத்தில், இனம், மதம், பாலினம் அல்லது பாலின பிரிவு ஆகியவை பிறப்புச் சான்றிதழ்கள் அல்லது அடையாள ஆவணங்களில் ஒரு வகையாக இருக்கக்கூடாது.

# கோரிக்கைகள்

## 6 அனைத்துப் பகுதிகளிலும் உள்ள பாலினப் பண்புகளின் சட்டப்பூர்வ அங்கீகாரம்

6. இன்டர்செக்ஸ் நபர்களின் அடிப்படை தனியுரிமை மற்றும் சுய கண்ணியத்தை மீறும், பாலின சரிபார்ப்பு சோதனைகளை முடிவுக்குக் கொண்டுவருவது மற்றும் அவர்கள் சட்டப்பூர்வ பாலினத்திற்கு ஏற்ப அனைத்து மட்டங்களிலும் விளையாட்டு துறை மற்றும் தேசிய, உள்நாட்டு விளையாட்டு போட்டிகளில் பங்கேற்க முடியும் என்பதை உறுதிப்படுத்தவும். இன்டர்செக்ஸ் மக்களாக உள்ள விளையாட்டு வீரர்களை பாலின நோக்கில் அவமானப்படுத்துதல், மற்றும் அவர்களின் பட்டங்களை பறித்தல் ஆகியவை சட்டத்திற்கு புறம்பானது என அறிவித்தல் வேண்டும்.

7. இன்டர்செக்ஸ் நபர்களின் அடிப்படை தனியுரிமை மற்றும் சுய கண்ணியத்தை மீறும், பாலின சரிபார்ப்பு சோதனைகளை முடிவுக்குக் கொண்டுவருவது மற்றும் அவர்கள் சட்டப்பூர்வ பாலினத்திற்கு ஏற்ப அனைத்து மட்டங்களிலும் விளையாட்டு துறை மற்றும் தேசிய, உள்நாட்டு விளையாட்டு போட்டிகளில் பங்கேற்க முடியும் என்பதை உறுதிப்படுத்தவும். இன்டர்செக்ஸ் மக்களாக உள்ள விளையாட்டு வீரர்களை பாலின நோக்கில் அவமானப்படுத்துதல், மற்றும் அவர்களின் பட்டங்களை பறித்தல் ஆகியவை சட்டத்திற்கு புறம்பானது என அறிவித்தல் வேண்டும்.

8. மாற்றுத்திறனாளிகள், சமூக மற்றும் கல்வியில் பின்தங்கிய பிரிவினர் போன்ற இடைபாலின நபர்களிடையே உள்ள கிடைமட்ட வேறுபாடுகளை அங்கீகரித்து அவர்களது சமூக உரிமைகளை இணைந்து பாதுகாத்தல் மற்றும் அவர்களின் தனிப்பட்ட தேவைகளைப் பாதுகாப்பதற்கான வழிமுறையை வழங்குதல்.

9. பாலின மாறுபாடுகளுடன் புலம்பெயர்ந்த தொழிலாளர்களான குறிப்பாக, மாற்றுப்பாலின சமூகத்தைச் சார்ந்தவர்களையும் சேர்ப்பதற்கும், பாதுகாப்பதற்கும், கொள்கைகள் உருவாக்கப்பட வேண்டும்.

# கோரிக்கைகள்

7

## மருத்துவ நடைமுறைகள் மற்றும் மருத்துவ பயிற்சியாளர்களை ஒழுங்குபடுத்துதல்

1. பிறப்புறுப்பு அறுவை சிகிச்சைகள், உளவியல் சார் ஒத்துழைக்கும் பொருட்டு துன்புறுத்தும் சிகிச்சை, மடை மாற்றும் உளவியல் திணிப்புமுறை மற்றும் பிற மருத்துவத் தலையீடுகளினால் பாலின ஒருங்கிணைவு பண்புகளை சிதைக்கும் மற்றும் தீங்கு விளைவிக்கும் நடைமுறைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து அதை தடுக்க சட்டமியற்றுதல் இன்றியமையாதது ஆகும்.

2. பிற வழிகளில் பாலினத் தேர்வுக்கான மருத்துவ மருந்துகளை எடுத்துக் கொள்ளும் உரிமை போதிய அறிவு கொண்ட வயது வந்தோருக்கு மட்டுமே தன் சுய அறிவில் பெற்று கொள்ள வழிவகை செய்யப்படல் வேண்டும்.

3. தன் உடல் சுதந்திரம் உட்பட. இன்டர்செக்ஸ் நபர்கள் தங்கள் சொந்த உடல் ஒருமைப்பாடு, உடல் சுயாட்சி மற்றும் சுயநிர்ணயத்தை அடையும் வகையில் தங்கள் சொந்த முடிவுகளை எடுக்க அதிகாரம் பெற்றிருக்க வேண்டும்.

4. இன்டர்செக்ஸ் நபர்களின் மருத்துவ பரிசோதனையின் போது தேவையற்ற, ஆரோக்கியமற்ற மற்றும் தீங்கு விளைவிக்கும் நடைமுறைகளை கையாளக்கூடாது மற்றும் அவர்களை கண்ணியமாக நடத்துதல் வேண்டும்.

5. உலக சுகாதார மையத்தின் சர்வதேச மருத்துவ வகைப்பாடு போன்ற மருத்துவ நடைமுறைகள், வழிகாட்டுதல்கள், நெறிமுறைகள் மற்றும் வகைப்பாடுகளில் உள்ள பாலின பண்புகள் பற்றிய விழிப்புணர்வை அறிந்திருக்க வேண்டும்.

6. முன்கூட்டிய மரபணு நோயறிதல், நேட்டல் ஸ்கிரீனிங்( கருவின் பாலினம் மற்றும் சிசு பாலின மாற்றங்கள்

# கோரிக்கைகள்

7

## மருத்துவ நடைமுறைகள் மற்றும் மருத்துவ பயிற்சியாளர்களை ஒழுங்குபடுத்துதல்

அறிதல்) தெரிந்து கொள்ள முட்படுதல் மற்றும் இன்டர்செக்ஸ் சிசு கருக்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட கருக்கலைப்பு சட்ட விரேதமானது என அறிவிக்கப்பட வேண்டும்.

7. பிறக்கும் இன்டர்செக்ஸ் சிசுக்கள் பற்றி அவர்களின் பெற்றோர்கள் அல்லது காப்பாளர்களிடம் இன்டர்செக்ஸ் குழந்தை வளர்ப்பு அனுபவங்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கும், புதிதாகப் பிறந்த இன்டர்செக்ஸ் குழந்தையை எவ்வாறு அணுக வேண்டும், இடைபாலின குழந்தையின் பிறப்பு முற்றிலும் இயற்கையான பிறப்பு நிலை தான் என்பது போன்ற தகவல்களை அவர்களுக்கு வழங்குவதற்கும், மனித உரிமைகள் பற்றிய அடிப்படையிலான இன்டர்செக்ஸ் தன்மை உள்ளடக்கிய அனைத்து தகவலையும் வழங்கி வளர்ப்பு ஆலோசனைகளும் வழங்க பட வேண்டும். 8. மாற்றுப்பாலின நபர்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதைக் கருத்தில் கொண்டு, கருக்கலைப்புகளுக்கான ஒழுங்கு நெறிமுறைகளை வழங்குதல். பாலினத்தவர்களுக்கிடையேயான பாகுபாட்டை முடிவுக்குக் கொண்டு வரவும், பாலின அடிப்படையில் சிசுக்கொலைக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் இது உதவும்.

8. செவிலியர்கள், தாதியர்கள், மருத்துவப் பயிற்சி பெறுபவர்களுக்கும், மற்றும் பிறந்த குழந்தைகளுக்கான மருத்துவப் பயிற்சி செய்பவர்களுக்கும் இடைபாலின குழந்தைகளின் உடல் ஒருமைப்பாட்டை ஆதரிக்கவும், பாதுகாக்கவும் பயிற்சி அளித்திடல் வேண்டும்.

9. இன்டர்செக்ஸ் நபர்களின் உடல் மற்றும் மனநல பாதுகாப்புத் தேவைகளைப் பற்றி மருத்துவ மனைகளுக்கு உணர்த்துவது, இன்டர்செக்ஸ் நபர்களின் உடல் மற்றும் மனநலத் தேவைகள் மற்றும் பிரச்சினைகளைப் பூர்த்தி செய்யும் பாலினம் சார்ந்த சுகாதாரப் பராமரிப்பை வழங்குதல் மற்றும் மருத்துவ முறைகளில் இடைபாலின மக்களுக்கு இடையூறு இல்லாத நுழைவை உறுதிசெய்ய வேண்டும்.

# கோரிக்கைகள்

8

## நீதிக்கான அணுகல் மற்றும் குறைகளை நிவர்த்தி செய்தல்

1. பயனுள்ள சட்டம் மற்றும் பாதுகாப்பு வழிமுறைகள் மூலம் இடை பாலின மக்களின் மீது அத்துமீறும் முறையற்ற  கருக்கலைப்பு, சிசுக்கொலை, மற்றும் கௌரவக் கொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்.

2. பாலியல் வன்முறை மற்றும் துன்புறுத்தல், வெறுக்கத்தக்க பேச்சு மற்றும் பாலினப்பாகுபாடு, ஒதுக்குதல், ஆணாதிக்கம் மற்றும் இனவெறி போன்ற பாகுபாட்டின் பிற வடிவங்களில் இருந்து பாதுகாப்பது தொடர்பான சட்டங்களில் இடைபாலின மக்களைச் சேர்ப்பது அவசியமாக்க வேண்டும்.

3. கடந்த காலங்களில் மாற்றுப்பாலின மற்றும் இடைபாலின மக்களுக்கு ஏற்பட்ட துன்பங்கள் மற்றும் அநீதிகளை கூடுமானவரை களைந்து, தேவையான சட்டம் இயற்றப்பட்டு,  இழப்பீடு, நீதி வழங்குதல், மற்றும் உண்மைக்கான உரிமையை வழங்குதல் நிலைநாட்டபட வேண்டும்.

4. இன்டர்செக்ஸ் மனித உரிமை மீறல்களைப் புகாரளிக்க பாதுகாப்பான வழிமுறையை வழங்குதல் மற்றும் சிக்கல்களை களைந்து உரிய பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும்.

5. இடைபாலினத்தவர் களுடைய குறைகள் அல்லது புகார்கள் காவல் துறையினரால் எந்தப் பாகுபாடுமின்றி கையாளப்படுவதை உறுதிசெய்து, காவல்துறை அதிகாரிகளின் அதிகார துஷ்பிரயோகத்தையும், அத்துமீறல், இழிவு படுத்துதல், போன்ற தவறான பார்வையை தவிர்க்க குறிப்பிட்ட பாலினப்பாதுகாப்புக் கொள்கைகள் வகுக்கப்பட வேண்டும்.

# கோரிக்கைகள்

9

## தரவு சேகரிப்பு: ஆராய்ச்சி இடைவெளிகளை நிவர்த்தி செய்தல்

1. இன்டர்செக்ஸ் நபர்களுக்கு அவர்கள் பிறந்த கட்டத்திலிருந்தே முழுத் தகவல் மற்றும் அவர்களின் சொந்த மருத்துவப் பதிவுகள் மற்றும் அவர்கள் பற்றிய சுய வரலாற்றை அணுகுவதற்கான உரிமை உள்ளது என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

2. தேசிய மக்கள்தொகை கணக்கெடுப்பு உட்பட, அரசாங்கத்தால் சேகரிக்கப்பட்ட அதிகாரப்பூர்வ புள்ளிவிபரங்களில், இடை பாலினத்தவர்களைப் பற்றிய துல்லியமான சேர்க்கை செய்ய படவேண்டும்.எனவே சமூக நலன், சமூகப் பாதுகாப்பு, குடியுரிமை, அவசர உதவி போன்ற நடவடிக்கைகளில் இடைபாலின மக்கள் சேர்க்கப்படுகிறார்கள்.

3. அரசாங்கத் திட்டங்கள், சமூகப் பாதுகாப்பு, குடியுரிமை போன்றவற்றை செயல்படுத்துவதற்காக, பாலினப் பிரிவினரின் தரவுகளைச் சேகரிப்பதற்கான வழிமுறையை வழங்குதல்.

4. இன்டர்செக்ஸ் நபர்களின் பிரச்சினைகள் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் தகவல்களில் உள்ள இடைவெளிகளை நிரப்ப கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுடன் ஒத்துழைப்பை அதிகப்படுத்தி மேம்படுத்த வேண்டும்.

# கோரிக்கைகள்

## 10 இன்டர்செக்ஸ் பிரச்சினைகள் தொடர்பான உணர்திறன் மற்றும் விழிப்புணர்வு.

1. இன்டர்செக்ஸ் மக்களின் பிரச்சினைகள் மற்றும் இடை பாலின சமூகங்கள் மற்றும் சமூகத்தில் உள்ள மாற்றுபாலின மக்களின் மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

2. இன்டர்செக்ஸ் நபர்கள், அவர்களது குடும்பங்கள் மற்றும் அவர்களின் சுற்றுப்புறங்களுக்கு ஆதரவான, பாதுகாப்பான மற்றும் மதிக்கதக்க சூழல்களை உருவாக்குதல் மற்றும் வாழ்க்கைச்சூழலை எளிதாக்குதல்.

3. கடந்த காலத்தில் இடைபாலின மக்களுக்கு ஏற்பட்ட துன்பங்கள் மற்றும் அநீதிகளுக்கு போதுமான அங்கீகாரத்தை வழங்குதல், போதுமான பரிகாரம், இழப்பீடு, நீதிக்கான அணுகல் மற்றும் உண்மைக்கான உரிமை ஆகியவற்றை வழங்குதல்.

4. இன்டர்செக்ஸ் மக்களின் நல்வாழ்வில் குறிப்பிட்ட பங்கு வகிக்கும் அனைத்து முக்கியப் பங்குதாரர்களும், அதாவது, சுகாதார வழங்குநர்கள், பெற்றோர்கள், கல்வித்துறை சார்ந்து பணிபுரிவோர், தொழில் வல்லுநர்கள் மற்றும் பொது சமூகம் ஆகியோருக்கு மனித உரிமைகள் கண்ணோட்டத்தில் இன்டர்செக்ஸ் மக்களின் பிரச்சினைகள் குறித்து அறிவுறுத்தப்பட வேண்டும்.

5. அரசியல் வாதிகள் உட்பட அரசு அதிகாரிகளுக்கும், மாற்றுப் பாலினத்தவர்களைப் பற்றிய புரிதலுடன், அவர்கள் சட்டத்தை உருவாக்கும் செயல்முறைகளின் போது சரியான சொற்களைப் பயன்படுத்த வேண்டும்.

# கோரிக்கைகள்

## 10 இன்டர்செக்ஸ் பிரச்சினைகள் தொடர்பான உணர்திறன் மற்றும் விழிப்புணர்வு.

6. இன்டர்செக்ஸ் நிறுவனங்கள் மற்றும் இன்டர்செக்ஸ் நல ஆதரவு குழுக்கள் அங்கீகரிக்கப்பட்டு, வளப்படுத்தப்பட்டு, நிலையான முறையில் பலப்படுத்தப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்.

7. ஊடகவியலாளர்கள் மத்தியில் மனித உரிமைகள் அடிப்படையிலான இன்டர்செக்ஸ் விழிப்புணர்வை வழங்குதல் மற்றும் ஊடகங்களில் இடைபாலின மக்கள் பற்றிய துல்லியமான புரிதல் மற்றும் வலிமையான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்திடல் வேண்டும்.

8. பொது விழிப்புணர்வை உருவாக்க, குறும்படங்கள், ஆவணப்படங்கள் மற்றும் வாழ்க்கை தொடர்பான இணையத் தொடர்கள் தயாரிப்பதை ஊக்குவிப்பதன் மூலம் மனித உரிமைகள் அடிப்படையிலான இன்டர்செக்ஸ் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டும். இதன் மூலம் இடைபாலின மக்களின் வாழ்க்கை பற்றி வெகுஜன மக்களுக்கு புரிதல் சார்ந்த விழிப்புணர்வை உண்டாக்க முடியும்.

9. இன்டர்செக்ஸ் மாறுபாடுகளைக் கொண்ட நபர்களின் வாழ்வியல் மற்றும் பாலின புரிதல்கள் எவ்வகையில் மாறுபட்டது என்பதன் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள LGBTQ+ சமூகத்தை பற்றி அறிவதிலும் தெளிவுபெற முடியும்.

# கோரிக்கைகள்

## 11 சொத்து மற்றும் பரம்பரை உரிமைகள்

1. இன்டர்செக்ஸ் குழந்தைகளுக்கு செய்யப்படும் பாலின நிர்ணயம் மற்றும் சரிசெய்தலின் பொருட்டு செய்யப்படும் அறுவை சிகிச்சைகள் தடை செய்யப்பட வேண்டும், பரம்பரை தொடர
2. வாரிசாக ஆண் மட்டுமே இருக்க வேண்டும் என்பது இல்லை என சட்டப்படி அமைய வேண்டும்.
3. மலட்டுத்தன்மை அல்லது குழந்தைப்பேறு இல்லாமை ஆகியவையை காரணம் காட்டி இடைபாலின மக்களின் வாரிசுரிமை மறுக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.

## 12 இன்டர்செக்ஸ் நபர்களை அவசரகால கொள்கை பதிவில் சேர்த்தல்

1. அவசரகால நடவடிக்கை வழிமுறைகள் மற்றும் கொள்கைகள் இன்டர்செக்ஸ் நபர்கள் மற்றும் அவர்களது பிரச்சனைகளை உள்ளடக்கியதாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
2. உதாரணமாக, கோவிட் 19 போன்ற நெருக்கடிகால நிலைகளில் மற்றும் இயற்கை பேரிடர் கால சூழலின் போது, இடை பாலினத்தவர்களுடைய பிரச்சனைகளைத் தீர்க்க குறிப்பிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.
3. இன்டர்செக்ஸ் நபர்கள் பேரிடர் மீட்பு திட்டங்களில் சேர்க்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

# நடவடிக்கைகளுக்கான அழைப்பு

**மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, ஆசிய இன்டர்செக்ஸ் இயக்கம் தங்களை அழைக்கிறது:**

## மனித உரிமைகள் நிறுவனங்கள்

1. சர்வதேச, பிராந்திய மற்றும் தேசிய மனித உரிமை நிறுவனங்கள் தங்கள் வேலையில் உள்ள பாலினப் பிரச்சினைகளுக்குத் தெரிவுநிலையை வழங்கவும்.

## அரசு நிலை

1. தேசிய அரசாங்கங்கள் ஆசிய இன்டர்செக்ஸ் இயக்கம் எழுப்பிய கவலைகளை நிவர்த்தி செய்து, பாலின பிரதிநிதிகள் மற்றும் அமைப்புகளுடன் நேரடி ஒத்துழைப்புடன் போதுமான தீர்வுகளை கையாள வேண்டும்.
2. பாலினங்களுக்கு இடையேயான பிறப்புறுப்பு சிதைவு, சம்மதமின்றி சரிசெய்தலின் பொருட்டு செய்யப்படும் அறுவை சிகிச்சை, சிசுக்கொலை மற்றும் இடைபாலின மக்கள் மீது செய்யப்படும் கௌரவக் கொலைகள் போன்ற தீங்கு விளைவிக்கும் நடைமுறைகளை தேசிய அரசாங்கங்கள் நிறுத்த வேண்டும்.

# நடவடிக்கைகளுக்கான அழைப்பு

## அரசு சாரா நிறுவனங்கள் அல்லது பிற நிறுவனங்களில்

1. ஊடக அமைப்புகள், வலை தளங்கள் மற்றும் சமுக வலை தளங்கள் மற்றும் ஆதாரங்கள் இன்டர்செக்ஸ் நபர்களின் தனியுரிமை, கண்ணியம் மற்றும் துல்லியமான பிரதிநிதித்துவத்திற்கான உரிமையை உறுதி செய்கின்றன.
2. சமூகத்தலைவர்கள் இன்டர்செக்ஸ் மக்களைச் சுற்றியிருக்கும் தவறான எண்ணங்களையும், புரிதல் குறைபாடுகளையும் ,களங்கத்தையும் போக்க பாலினம் மற்றும் பாலின ஒருங்கிணைவு, பால் ஈர்ப்பு பற்றிய தெளிவும், கற்றலும் தெரிந்து கொள்ள வேண்டும் .
3. இன்டர்செக்ஸ் அமைப்புகளுடன் ஈடுபடுவதற்கும், அவர்களின் திறனை அதிகரிப்பதற்கும், அறிவைக் கட்டியெழுப்புவதற்கும், அவர்களின் மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதற்குமான போராட்டத்தில் அவர்களுக்கு ஆதரவளிக்க நிதியளிப்பவர்கள் முன்வர வேண்டும்.
4. மனித உரிமைகள் அமைப்புகள், பாலினம் சார்ந்த அமைப்புகளுடன் நட்பு பாலங்களை உருவாக்க பங்களிக்கின்றன. பரஸ்பர ஆதரவு மற்றும் அர்த்தமுள்ள ஈடுபாட்டிற்கான அடிப்படையை உருவாக்குகின்றன. இவை ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பின் பேரில் செய்யப்பட வேண்டும், மற்ற நோக்கங்களுக்கான வழிமுறையாக பாலினப் பிரச்சினைகளை யாரும் கருவியாக்கக் கூடாது.

## மேலும் தகவல்களுக்கு தயவுசெய்து தொடர்பு கொள்ளுங்கள்:

Hiker Chiu,
Executive Director of Intersex Asia, hiker@intersexasia.org

Prashant Singh,
Researcher & UN Advocacy Officer of Intersex Asia, prashant@intersexasia.org

Intersex Asia 2023

Intersex Asia
https://www.intersexasia.org
@intersexasia
@intersexasia